

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு







**திருச்சி மறைமாவட்டம்**

**மின்னிதழ்**

**மே 2026**

**செயலர் பக்கம்**

**அருள்பணி சு. மரிய சூசை**

## அன்பு உறவுகளே !

உலக அன்னையர் தினம்
மே மாதத்தின் இரண்டாம் ஞாயிறு கொண்டாடப்படுகிறது.
அன்னை ஓர் ஆலயம், தாயிற் சிறந்த கோவிலுமில்லை,தாயின் மடிதான் உலகம் - போன்ற வாக்கியங்கள் தாயின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.
இத்தனை சிறப்புகள் நம் அன்னையருக்கே உண்டென்றால், கடவுளின் தாயாம் கன்னி மரியாவின் சிறப்புகள் சொல்லில் அடங்கா. அகிலத்தின் மீட்புக்காக தம் அன்பு மகன் இயேசுவையே தாரைவார்த்த தாயுள்ளம் மரியாவுடையது. அந்த ஆசிர்வதிக்கப்பட்ட அன்னைக்கு ஆயிரம் கோடி புகழ் செலுத்தினாலும் அது தகுமே. ஆகவேதான் கத்தோலிக்கத் திரு அவையும், அன்னையர்தினம் கொண்டாடப்படுகிற இந்த மே மாதத்தை புனித மரியன்னையின் வணக்க மாதமாக சிறப்பிக்கிறது. வளமைக்கான, கிரேக்க பெண் கடவுளின் பெயரால், மே மாதம் அழைக்கப்படுகிறது. புது வாழ்வும் புது வசந்தமும் இந்த பெண் கடவுளிடமிருந்தே பிறக்கின்றன என்பது கிரேக்கர்களும் உரோமையர்களும் நம்பியிருந்த ஒன்று. எனவே குளிர்காலம் முடிந்து, பகலவன் புத்தொளி பாய்ச்சத் தொடங்கி, செடிகளும் மரங்களும் புத்திலைகளையும் புது மலர்களையும் பிறப்பிக்கத் தொடங்கியிருந்த வசந்த காலத்தின் வாசலில் இந்த வளமைக்கான பெண் தெய்வத்துக்கு விழா கொண்டாடுவார்கள். இந்த பின்புலத்தில், அன்னை மரியாவின் வழியாக புது வாழ்வும் புது வசந்தமும் பாருலகை அடைந்தன என்பதை உணர்த்தும் நோக்கமே இந்த வணக்க மாதத்தின் சிறப்பு. 1965, ஏப்ரல் 29 ஆம் நாள் திருத்தந்தை ஆறாம் பவுல் மே மாதத்தை மரியாவுக்கு அர்ப்பணித்தார். அதன் பிறகு அகில உலகத் திரு அவை மே மாதத்தை வணக்க மாதமாக, மாதா மாதமாக, தேவ தாயின் மாதமாக பக்திச் சிறப்புடன் கொண்டாடி மகிழ்கிறது.
ஆகவே, அருள் நிறைந்த அன்னையின் அன்புப் பிள்ளைகளாக நாமும் வாழ முயல வேண்டும். அன்னையின்மீது நாம் கொண்டிருக்கும் அன்பு இன்னும் பெருகட்டும். அந்த அன்னையின் பண்புகள் நம் வாழ்வுச் செயல்பாடுகளில் நிறைவாக வெளிப்படட்டும்.

அருள்பணி. சு. மரியசூசை

# நடனமாடிய கதிரவன்



## போர் நிறுத்தத்திற்காக செபமாலை செபியுங்கள்!

ஆம் , 1917 ஆம் ஆண்டு, மே 13 தேதியன்று மூன்று பிள்ளைகளுக்கு, நம் அன்னை மரியா காட்சிக்கொடுத்து கூறினார். அப்பொழுது முதலாம் உலகப் போர் நடைபெற்று கொண்டிருந்தது.

போர்ச்சுக்கலில், கோவா டா இரியா என்னும் இடத்தில் லூசியா (வயது 10), பிரான்சிஸ்கோ (9), ஜெசிந்தா(7) ஆகிய மூன்று சிறுவர்களும் தம் மந்தையை மேய்த்து கொண்டிருந்தனர். அங்கு கதிரவனை விட பிரகாசமாக அன்னை மரியா, அச்சிறுவர்களுக்கு காட்சியளித்தார்.



ஜூன் 13 அன்று மறுபடியும் அன்னை மரியா காட்சியளித்தார். அன்று, ஜெசிந்தாவும் பிரான்சிஸ்கோவும் விரைவில் நிலைவாழ்விற்கு செல்வார்கள் என்றும், லூசியா இவ்வுலகில் நீண்ட நாள் வாழ்ந்து, செபமாலை பக்தியையும் மரியாவின் மாசற்ற திருஇருதய பக்தியையும் பரப்புவார் என்றும் கூறினார். அச்சிறுவர்களுக்கு நரகத்தின் காட்சிகளையும், மூன்று இரகசியங்களையும் கூறினார். சிறுவர்கள், அன்னை மரியாவின் காட்சியைப் பற்றிக் கூறும்போது யாரும் நம்பவில்லை. ஜூலை மாதம் 13 ஆம் தேதியன்று அவ்விடத்திற்கு சென்ற சிறுவர்களுக்கு; அக்டோபர் 13, 1917 அன்று நண்பகல் 12 மணிக்கு, தாம் புதுமை நிகழ்த்த போவதாகவும் அதன் நிமித்தம் அனைவரும் அவர் காட்சியளித்தார் என்று நம்புவர் என்றும் அன்னை மரியா கூறினார். ஆகஸ்ட் 13 அன்று சிறுவர்கள் அவ்விடத்திற்கு செல்வதை தடுப்பதற்கு, அவர்களை கைதுசெய்து சிறையில் அடைத்தார்,அந்நகரத்தின் ஆட்சியர் ஆர்தூர் சான்டோஸ். அச்சிறுவர்கள் விடுதலை பெற்று வெளியே வந்தபோது வலின்ஹோஸ் (Valinhos) என்ற இடத்தில் அன்னை மரியா காட்சித் தந்தார். அன்றும் அதன் பின் செம்டம்பர் 13, 1917 அன்றும் காட்சி தந்த போது, இருமுறையும் அன்னை மரியா, 13 அக்டோபர் 1917 அன்று புதுமை செய்யப்போவதாக கூறினார். இச்செய்தி போர்ச்சுக்கல் நாடெங்கும் பரவிற்று.




அக்டோபர் 13, 1917 அன்று எழுபது ஆயிரத்திற்கு (70,000) மேற்பட்டோர் அவ்விடத்தில் (கோவா டா இரியா ) கூடினர். நம்பிக்கை கொண்டோர், நம்பிக்கையற்றோர், விமர்சிப்போர், பத்திரிக்கையாளர்கள், சந்தேகம் கொண்டோர், ஆராய்ச்சியாளர்கள் எனப் பலரும், அவ்விடத்தில் கூடினர். இவர்களில் O' Seculo என்ற நாளிதழின் தலைமை ஆசிரியர் அல்மெய்தா (Avelino de Almeida) குறிப்பிடத்தக்கவர்.

மதச்சார்பற்ற இவர் இச்செய்தி நிகழாமல் அனைவரும் ஏமாந்து போகப் போகின்றனர் என்ற, எதிர்மறை செய்தியை 13 அக்டோபர் 1917 அன்று காலையில் தன் பத்திரிக்கையில் வெளியிட்டார். வெளிப்படையாக அல்லாமல் மறைமுக கேலியாக அச்செய்தி அமைந்திருந்தது. இவர் மட்டுமல்ல, பல ஆராய்ச்சியாளர்களும் அங்கு கூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மூன்று நாட்களாக மழை பெய்த காரணத்தால் தரை சகதியாக இருந்தது. இயற்கையையும் பாராமல் பலரும் அங்கு நனைந்தவாரே கூடினர். முதலாம் உலகப்போர் அப்பொழுது நடந்து கொண்டிருந்ததால், பிரான்ஸ் நாட்டில் இருந்த தன் படைகளுக்கு ஒத்த, கடிகார நேரமானது போர்ச்சுகளில் மாற்றப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் நண்பகல் 12 மணி என்பது போர்ச்சுக்கலில் மாற்றியமைப்பட்ட கடிகாரத்தின் படி மதியம் 2 மணி ஆகும்.



13-10-1917 அன்று மதியம் 1:30 மணிக்கு , மூன்று சிறுவர்களுள் ஒருவரான லூசியா, அன்னை மரியா வருகிறார் என்று வானத்தை பார்த்தபடியே அக்களித்து கூறினார். அவருடைய வார்த்தைகளை கேட்டவுடன் கூடியிருந்த அனைவரும், மழை என்றும் பாராமல் தங்களுடைய குடைகளை மடக்கி வானத்தை பார்த்தனர். அப்பொழுது திடீரென்று மேகங்கள் விலகிச் சென்று கதிரவன் வெளிவந்தது. லூசியா உந்தப்பட்டவளாய் கதிரவனை பார்க்க கூக்குரலிட்டார்.

அவருடைய கூக்குரலை கேட்டவுடன் அனைவருடைய பார்வையும் கதிரவனை நோக்கிச் சென்றது. நண்பகலில் உள்ள வெப்பம் அனைவராலும் உணரப்பட்டது.



நண்பகல் கதிரவனை யாராலும் தன் கண்களால் நேரடியாக காண முடியாது. அப்படி பார்த்தோமானால் நமது கண்கள் பாதிக்கப்படும். ஆனால் அன்று கதிரவன் பிரகாசித்து கொண்டிருந்தாலும், நண்பகல் வெப்பத்தை உணர்ந்தாலும், அங்கு கூடியிருந்த அனைவரும், ஒருவர்விடாமல் அனைவரும், கதிரவனை நேரடியாக பார்த்தனர். அவர்களுக்கு கண்களில் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை. அனைவரும் கதிரவனை சிறிதும் சிரமமில்லாமல் உற்று நோக்கினார்கள்.

அவர்கள் பார்த்து கொண்டிருக்கும் பொழுதே கதிரவன் தன் அச்சில் சுழல தொடங்கியது (spun about its axis). இவ்வாறு சுழலும் போது ஒற்றை நிற ஒளிக் கதிர்கள் (monochromatic light), கதிரவனிலிருந்து தென்பட்டன. இந்த ஒளிக் கதிர்கள் வானவில் அல்ல, ஏனென்றால் அக்கதிர்கள் கதிரவனிலிருந்தே வெளிப்பட்டன. வானவிலானது கதிரவனிலிருந்து புறப்படாது. மாறாக பிரதிபலிப்பு ஊடகத்தில் தான் வானவில் தோன்றும். அதுமட்டுமல்லாமல் வானவில்லின் கதிர்கள் ஒற்றை நிற ஒளிக் கதிர்கள் அல்ல. அக்கூட்டத்தில் இருந்த பல ஆராய்ச்சியாளர்களும் இந்த கருத்தை ஒருமிக்க ஏற்றுக் கொண்டனர்.



கதிரவனிலிருந்து புறப்பட்ட ஒளிக் கதிர்கள் அங்கு கூடியிருந்த மக்கள் மீதும் பொருட்கள் மீதும் பட்டதால் மக்களும், பொருட்களும் அந்த ஒளிக்கதிரின் நிறமாகவே தென்பட்டனர். எ.கா மஞ்சள் நிற ஒளிக்கதிர்கள் வரும் போது அனைவரும் , அனைத்தும் மஞ்சள் நிறமாக மாறினர். வானவில் நிகழும் போது இது நடைபெறாது. இவை அனைத்தும் நிகழும்போது அனைவரும் கதிரவனை உற்றுநோக்கியவாறே இருந்தனர். அவர்களின் கண்கள் பாதிப்பு அடையவில்லை.



இவ்வாறு கதிரவன் சுழன்று கொண்டிருக்கும்போது திடீரென்று அதன் இடத்தை விட்டு பூமியை நோக்கி பாய்ந்து வந்தது. இதனை கண்ட மக்கள் உலகம் அழிவுறப்போகின்றது என்ற பேரச்சத்தில் மூழ்கினர். அனைவரும் முழந்தாள் படியிட்டு வேண்ட தொடங்கினர்.

பாய்ந்து வந்த கதிரவன் சில நொடிகள் அசையாமல் நின்று அதன்பின் பின்நோக்கி செல்வதும் பூமியை நோக்கி வருவதுமாக இருந்தது. இதனை தான் O'Seculo நாளிதழின் தலைமை ஆசிரியர் "கதிரவன் நடனம் ஆடியது" என்று மறுநாள் தன் இதழில் குறிப்பிடுகிறார். பல எதிர்ப்புகளின் மத்தியிலும் அவர் புதுமை நிகழ்ந்தது என்று சிறிதும் ஐயமின்றி சான்று பகர்ந்தார்.



பூமியை நோக்கி பாய்ந்து வந்த கதிரவனை, மக்கள் நேரடியாக பார்த்தார்கள். அதன் வெப்பத்தை உணர்ந்தார்கள். மழையினால் நனைந்த உடைகள் கதிரவனின் வெப்பத்தால் காய்ந்து, உலர்ந்த ஆடையாக அனைவருக்கும் மாறியது. ஆடை மட்டும் உலரவில்லை மாறாக தரையும் உலர்ந்தது. இதனால் இந்நிகழ்வு ஒரு மாயை என்ற கருத்துக்கு இடமில்லாமல் போகின்றது.

இந்நிகழ்வை கோவா டா இரியா என்ற இடத்தில் கூடியிருந்த சுமார் 70,000 மேற்பட்ட மக்களும் அவ்விடத்தை சுற்றி சுமார் 3 மைல் தொலைவிலிருந்த அனைவரும் கண்டனர். மற்றவர்கள் இதை காணவில்லை. உலகில் உள்ள பல்வேறு ஆராய்ச்சி கூடங்களிலும், கதிரவனில் எந்த ஒரு நிகழ்வும் நடந்ததாக பதிவு செய்யபடவில்லை. இதனால் இப்புதுமை கோவா டா இரியா என்ற இடத்தில் மட்டும் நிகழ்ந்தேறியது என்பது உறுதியாகின்றது. மார்ச்சி(De Marchi) என்பவர் தன் குழுவுடன் சேர்ந்து சுமார் 7 ஆண்டுகள் அங்கேயே தங்கி மக்களிடம் நேர்க்காணல் செய்தார். அங்கு இருந்த மக்கள் ஒருவர் கூட இந்நிகழ்வை மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளை அறிவியல் கோட்பாடுகளால் விளக்க முடியவில்லை. அருள்பணி ஸ்டான்லி ஜக்கி என்பவரும், முனைவர் இக்னாசியோ பெரின் என்பவரும் இந்நிகழ்வுகளுக்கு நுணுக்கமான அறிவியல் தொடர் விளக்கங்கள் கூறினாலும், அவை அனைத்தும் சீராக நிகழ்வதற்கு; 61,428, 000, 000, 000, 000 வாய்ப்புகளில் ஒன்றே ஒன்று தான் உள்ளது என்றும் ஒப்புக்கொள்கின்றனர். இதனால் இந்நிகழ்வு அனைத்தும், அனைவரும் நம்புவதற்காகவே, அன்னை மரியா நடத்திய புதுமை. இந்நிகழ்வை புதுமை என்றும் கத்தோலிக்க திரு அவை பல ஆராய்ச்சி மற்றும் விவாதங்களுக்கு பிறகு உறுதி செய்தது.

இந்நிகழ்வு அனைத்தும் சுமார் 10 நிமிடங்கள் நடைபெற்றன. அங்கு வந்த பலரும் கத்தோலிக்க நம்பிக்கையை பின்பற்றலாயினர்.

தற்போது உள்ள போர் சூழலில் நாம், இப்புதுமையை உள்வாங்கியவர்களாய் அன்னை மரியா கூறியபடி உலக அமைதிக்காக செபமாலை செபிப்போம்.


மரியே வாழ்க!











# தன்னார்வ வேதியர்களுக்கான ஆசிரம வாழ்வியல் அனுபவப் பயிற்சி

நம் இந்திய மண்ணின் கலாச்சார, தத்துவ மரபுகளின் பின்புலத்தில் கிறிஸ்துவைக் காணவும் வழிபடவும் உதவும் வகையில், 19.04.2026 ஞாயிறு அன்று 43 தன்னார்வ வேதியர்கள் ஆசிரம வாழ்வியல் அனுபவப் பயிற்சிக்காக தண்ணீர்பள்ளி, சாந்திவனத்தில் அமைந்துள்ள சச்சிதானந்தா ஆசிரமத்திற்குச் சென்றனர். காலை 10.30 மணி தேநீருக்குப் பிறகு, ஆசிரமத் தலைவர் அருள்பணி. டாரத்திக் ராஜன் அவர்களால் ஆசிரம வாழ்வுமுறை, ஆசிரமத்தின் தோற்றம், கோவில் கட்டிட அமைப்பு முறை, கோபுரம், கருவறை, சிலைகள், சிலுவை முதலிய ஆசிரம இறையியல் கூறுகள் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டு, ஆசிரமம் முழுவதும் சுற்றிக் காண்பிக்கப்பட்டது.

நண்பகல் 12.15 மணிக்கு சந்தியா வந்தனா – நண்பகல் இறைவேண்டலில் கலந்துகொண்டனர். நண்பகல் 12:45 மணிக்கு ஆசிரமத்தினர் அன்போடு வழங்கிய நண்பகல் உணவை உண்ட பின்பு, பிற்பகல் 2.00 மணிக்கு அருள்பணி. பீட் கிரிப்பித்ஸ் பற்றிய ஆவணப்படம் கண்டு பயன் பெற்றனர். பிற்பகல் 3.00 மணிக்கு அருள்பணி. பின்டோ அவர்கள் ஞாயிறு திருப்பலி நிறைவேற்றினார். மாலை 4.30 மணிக்கு ஆசிரமத்தின் தலைவர் அருள்பணி. டாரத்திக் ராஜன் அவர்களுக்கு நன்றி பாராட்டி, தேநீர் அருந்திவிட்டு ஆசிரமத்திலிருந்து புறப்பட்டனர். இந்திய மண்ணின் மரபும் பாரம்பரியமும் பண்பாடும் தழுவி அமைந்திருந்த இந்த ஆசிரம வாழ்வியல் அனுபவம் பலருக்கு புதுவித ஆன்மிக அனுபவத்தைக் கொடுத்தது.













# விடுமுறை விவிலியப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி பாசறை

18.04.2026 ஞாயிறு அன்று மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்தில் நடைபெற்ற VBS ஆசிரியர்களுக்கான பயிற்சி பாசறையில் 19 பங்குகளிலிருந்து 73 ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். 25.04.2026 ஞாயிறு அன்று திருச்சி, நல்லாயன் நிலையத்தில் நடைபெற்ற விடுமுறை விவிலியப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியில் பொன்மலை, கிராப்பட்டி, புத்தூர், கீரனூர் ஆகிய நான்கு மறைவட்டங்களைச் சேர்ந்த 41 பங்குகளிலிருந்து 168 ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

பங்கேற்பாளர்கள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, தனித்தனி குழுக்களில் இவ்வாண்டுக்கான பாடத்திட்டம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. விவிலிய விளையாட்டுகள், பாடல்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன. பங்கேற்ற அனைத்துப் பங்குகளுக்கும் பாட ஏடுகள், பயிற்சி ஏடுகள், அருளாளர் இராணி மரியா வரலாறு, பாடல் தாள்கள், பேட்ஜ் ஆகிய துணைக்கருவிகள் வழங்கப்பட்டன.

## மணப்பாறையில்

































# திருச்சியில்


















# துறவறத் தன்னார்வலர்களுக்கு நன்றி பாராட்டும் விழா

11.04.2026 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ஜெகன் மாதா நகரிலுள்ள புனித அன்னாள் துறவற சபையின் இல்லத்தில் துறவறத் தன்னார்வலர்களுக்கான நன்றி பாராட்டும் விழா நடைபெற்றது. இதில் 6 அருள்சகோதரிகள் கலந்துகொண்டனர். முதலில் செயலர் தந்தை நன்றித் திருப்பலி நிறைவேற்றினார். பின்னர் செயலர் அருள்சகோதரிகள் பணிக்குழுவுடன் இணைந்து செய்த பணிகளைப் பாராட்டினார். அனைவருக்கும் நன்றிப் பரிசுகள் வழங்கப்பட்டன. அருள்சகோதரிகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்தும் செயலருக்கு நன்றி தெரிவித்தும் மகிழ்ந்தனர். இறுதியில் அனைவருக்கும் இரவு விருந்து பரிமாறப்பட்டது.



# பணிக்குழுவின் தன்னார்வலர்களுக்கான சுற்றுலா

07.04.2026, செவ்வாய்க்கிழமை அன்று பணிக்குழுவின் பல பணிகளில் இதுவரை உதவிய வேதியர்கள், தன்னார்வ வேதியர்கள் என மொத்தம் 13 நபர்கள் செயலர் தந்தையால் கொடைக்கானலுக்கு ஒரு நாள் இன்பச் சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டனர். பல்வேறு இடங்களைச் சுற்றிப்பார்த்து உறவில் மகிழ்ந்திருந்தனர்.



















